www.tamilrangam.net

# புலிக்குரல்





மக்களின்
விடுதலைக்காய்
எங்களின்
இதயத்தை
தியாகமெனும்
ஏர் பூட்டி
உழுதீர்கள்...

விழுதாய்
இருந்தீர்கள்...

வீரர்கள்
வீழ்த்தினாலும்
விதையாகி
எழுவீர்கள்
ஒரு விடுதலைக்காய்...

அராஜகத்தின் முன்
நீங்கள
புதைந்த
தரை முழுவதும்
நாங்கள்
நிமிர்கின்றோம்...!

அராஜகம்—
உங்களைச்
சிதைக்கலாம்!
ஆனால்—
சிந்தனைகள்

சுடர்விட்டுக்
கொண்டேயிருக்கும்...!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

"அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள மத்தியில் புகழ் பெற்ற புரட்சிகர தலைவர்கள் மறைந்த பின்னர், அவர்களுடைய எதிரிகள் அடக்கி, ஒடுக்கப் பட்ட வர்க்கங்களை ஏமாற்றுவதற்காக இந்த தலைவர்களின் பெயர்களை பயன் டடுத்த முயல்வது, வரலாற்றில் அடிக்கடி நிகழ்கின்றது.

லெனின்

## விமர்சனம், சுயவிமர்சனம் பற்றி...

நம் கட்சி ஒரு சீர்செய் இயக்கத்தை தொடங்க இருக்கிறது. இது விமர்சனம் சுயவிமர்சனம் மூலம் கட்சிக்குள் உள்ள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான ஒரு வழி: கட்சிக்கும் மக்களுக்குமிடையேயுள்ள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மொரு வழியாகும். இத்தடவை இந்த இயக்கம் அதிகாரவர்க்கமுறை, குறுங்குழுவாதம், அகநிலைவர்தம் ஆகிய மூன்று தீய பழக்கங்களை குறி வைத்து நடத்தப்படும்,

கட்சி முழுவதும் அரசியல் சித்தாந்த வேலையை பயன்படுத்த வேண்டும். ராணுவ அந்தஸ்துகள் முறையும் பிற அமைப்பு முறைகளும் ஏற்படுத்தப்பட்டி ருப்பினும் உயர் இடத்தில் உள்ளோர் தமக்கு கீழள்ளோரிடமும் நெருக்கமாக இருத்தல் வேண்டும். உறுப்பினர்கள் (கேடர்கள்) படைவீரர்களிடம் நெருக்க மாக இருத்தல் வேண்டும். கீழ் நிலையிலுள்ளோர் தமது மேலாளர்களை விமர்சிக்கவும் படைவீராகள் கேடர்களை விமர்சிக்கவும் அனுமதிக்க வேண் டும், உதாரணமாக விமர்சனங்களை செய்ய வாய்ப்பளிக்க ஒரு கட்சி மாநாடு கூட்டப்படலாம். 'மூன்று தீமை' களுக்கெதிரான இயக்கத்தின் போது (ஊழல், விரயம், அதிகாரவர்க்கம்) தோழர் சென்று சரியாகக்குறிப்பிட்டார். இத்தனை ஆண்டுகள் நாம் ஆணைகள் பிறப்பித்து வரும்போது, நமக்கு கீழுள்ளோர் சற்றுக்காலம், ஒரே ஒரு வாரம் நம்மை விமர்சிக்க அனுமதித்தாலென்ன? விமர்சனங்கள் தொடங்கும் முன் சில தயாரிப்புகள் செய்யும். ஓர் அறிக்கை அளிக்கவும் உங்களது சொந்த குறைபாடுகள்பற்றி பேசவும், அவை சில அம்சங்களாகத்தானிருக்கும். பின்னர் தோழர்களைப் பேச விடுங்கள். அவர் கள் சில அம்சங்களை குறிப்பிட்டு விமர்சிப்பர் மக்கள் நியாயமானவர்கள் நமது சாதனைகளை மறைத்துவிட மாட்டார்கள்.

மா சேதுங்

* இப்பிரசுரம் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலும் சுற்றுக்கு விடப்படுகின்றது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

வெளியீடு- 2

நன்கொடை ரூ. 2-00

# புதுக்குரல்

## உள்ளே...

புதிய திசையில்...

☐

உரிமை இழந்தோம்
உடமை இழந்தோம்
உணர்வை
இழக்கலாமா?

☐

இருண்ட பகல்

☐

இங்கேயும்
இப்படித்தான்...!

☐

ஈழ விடுதலைப்
போராட்ட
வதை முகாமிலிருந்து
ஒரு மடல்

## துரோகிகள் வென்றதில்லை!

## விடுதலைப் போராட்டங்கள் தோற்றதில்லை!

1983- ஜூலைக் கலவரத்திற்குப் பின் சீறிப்பாய்ந்தெழுந்த தமிழ் ஈழ விடுதலைப் புரட்சியானது உலக முழுவதிலும் நடந்தேறிவரும் ஆயுதப் புரட்சியின் வரலாற்றில் ஒளி உமிழும் முத்திரைகளைப் பதித்தது. உலக முழுவதிலும் ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும் சொந்த நாட்டு பிற்போக்கு பாசிச ஆட்சிக்கெதிராகவும் புரட்சிப்பதாகை உயர்த்தியுள்ள புரட்சிகரசக்திகளுக்கு உத்வேகமுட்டும் உந்து சக்தியாக தமிழ் ஈழ ஆயுத போராட்டம் அமைந்தது.

இந்த ஆயுதப் போராட்டத்தில் ஈழத் தமிழ் இளைஞர்கள் காட்டிய மாவீரமும் செய்த தியாகமும் வரலாற்றில் பிரமிப்பூட்டத் தக்கவையாகும். இருந்தும் கூட இன்று ஈழவிடுதலை போராட்டமானது பின்னடைவுக்கு உட்பட்டு . சிக்கலுக்கு ஆட்பட்டு தேக்கமுற்று இருப்பது வேதனையளிப்பதாகும்.

இன்றைக்கும் கூட தளத்திலே உறுதியாக நின்று, உற்றார்–உறவினரை மறந்து, உயிரை துச்சமென மதித்து மீசை முளைக்காத இளமைப் பருவத்தே மீளாப்பயணத்திற்கு புறப்பட்ட எமது வீரமறவர்கள், விடுதலை போராளிகள் வாழ்த்தி வணங்கத் தக்கவர்களே. பொது எதிரியான பேரினவாத, பௌத்த மதவாத பாசிச ஜெயவர்த்தனேயின் தலைமையிலான அமெரிக்க அடிவருடி அரசுக்கெதிரான ஆயுதப் போரில் ஆற்றி வரும் பங்கானது மகத்தானதும் ஒளி மிக்கதும் ஆகும்;

அதே நேரத்தில் இத்துணை விழுமிய தியாகத்திற்கும் பின்னர் அமையவிருக்கும் அரசு– தோன்றவிருக்கும் தமிழ் ஈழ அரசு பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான மக்கள் ஜனநாயக அரசாக மலர வேண்டும் என்ற எதிர்பார்ப்பே சரியானதாக இருக்க முடியும். அல்லவெனில் அமையவிருக்கும் அவ்வரசும் கூட ஏதேனும் ஒரு வகையில் பொது எதிரியின் செல்வாக்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்ட ஒரு பிற்போக்கு சுரண்டும் வர்க்க அரசாகவே தரங்கெட்டு போகும். சாராம்சத்தில் தமிழ் ஈழ விடுதலை என்ற உன்னத லட்சியத்திற்காக ரத்தத்தை வெள்ள

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

மெனப் பாய்ச்சி செய்த பெருந் தியாகங்கள் அர்த்தமற்றுப் போகும், ஆம் விடுதலை வீணையின் கம்பிகள் அறுபட்டு பிற்போக்கு அபஸ்வரங்களே எதிரொலிக்கும்.

ஆரம்பத்தில் தமிழ் ஈழப் போராளிகளுக்கு ஆதரவு தருவதாகவும் ஆயுதமளிப்பதாகவும், முகாம் அமைத்துக் கொள்ள உதவுவதாகவும், பயிற்சி தர முன் வருவதாகவும், பாசாங்கு செய்த இந்திய நாட்டின் மத்திய, மாநில அரசுகளின் உள் நோக்கங்கள் திம்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வெட்ட வெளிச்சமாகி விட்டது. சூளைமேடு நிகழ்ச்சிகள், தமிழ் ஈழப் போராளிகளிடமிருந்து ஆயுதப் பறிப்பு, ஒயர்லஸ் கருவிகளை பறித்தெடுத்தது. கைது செய்து போராளிகளை லாக்அப் அறைக்குள்ளே வீடியோ படமெடுத்தது, போன்ற இந்திய நாட்டில் நடந்தேறிய அண்மைக்கால நிகழ்ச்சிகள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதே ஆரும். இன்னமும் ஆங்காங்கே நடைபெறும் கொள்ளைகள், குண்டு வைப்புகளுக்கு கூட ஈழப் போராளிகளை காரணமாக்கி தமிழ்ஈழ போராளிகளை கொச்சைப்படுத்துவது தமிழகத்தில் தற்போது வாடிக்கையாகி வருகிறது. மொத்தத்தில் இந்தியாவின் மைய மாநில அரசுகள் தமிழ் ஈழப் போரில் ஆர்வங் காட்டாதது இயற்கையானதே.

தமிழகத்தில் உள்ள வாக்குச் சீட்டு வியாபாரிகளான முதலாளியக் கட்சிகளே ஈழப் போரை அவர்களின் அரசியல் சூதாட்டாதிற்கான பகடைக்காயாக்கி காயுருட்டினார்கள். தமிழகத்திலுள்ள கமிழ் மக்களிடையே தாங்கள் மட்டுமே தமிழினத்தின் ரட்சகர்கள் என்று பாவலாக் காட்டவே அவர்கள் தமிழ் ஈழப் போரை பயன்படுத்தினர். ஆரம்பத்தில் இவர்கள் காட்டிய ஆதரவு சூரத்தனத்தின் சுருதி இறங்கி விட்டதை இப்போது நம்மால் உணர முடிகிறது.

உலக முழுவதிலும் தங்களின் செல்வாக்கு மண்டலத்தை விஸ்தரித்துக் கொள்ள நாய்ச்சண்டை போட்டு வரும் ஏகாதிபத்தியச் சாத்தான்கள் பல்வேறு ஈழப்போராளிகளின் குழுக்களுக்குள்ளே ஊடுருவி அதைக் காயடித்துக் காயப்படுத்தி தங்களின் எடுபிடி இயக்கமாக மாற்றவும் அதன் மூலம் தமிழ் ஈழமே அமைந்தாலும் கூட அதன் அதிகாரப் பொறுப்பில் தங்களின் தலையாட்டி பொம்மைகளை அமர்த்திவிடலாம் என்ற நப்பாசையில் நாக்கைத் தொங்கப் போட்டு நாயாய்த் திரிகின்றன. இந்த ஏகாதிபத்தியச் சதிக்கெதிராக விழிப்புடன் இருக்க வேணடியது இன்றைய ஈழப் போராளிகளாகிய நமது கடமையாகி விட்டது. ஆம்! நமது நரம்பு கண்கள் ஒவ்வொன்றும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய கட்டமிது.

ஈழப் போராளிகளாகிய நாம், மார்க்சியம் லெனினியம், மாவோ சிந்தனை ஆகிய தத்துவங்களை ஆயுதமாகக் கொண்டு பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ், ஈழச் சமூகத்தைப் பற்றி தெளிவான புரிதலோடு ஆயுதப் புரட்சிப் பாதையில் முன்னேற வேண்டும். அரசியலில்லாத ராணுவம் என்பது எப்போதுமே ஒரு அராஜகப் படையாகவே தரங்கெடும்; எனவே தான் சிந்தனையாளர் மாவோ அரசியல் தான் துப்பாக்கிக்கு ஆணையிட வேண்டுமே தவிர துப்பாக்கி அரசியலுக்கு ஆணையிடக் கூடாது, எனக் குறிப்பிட்டார். எனவே ராணுவப் பாதையென்பது அரசியல் பாதையின் ஆளுகைக்கு உட்பட்டதாகவே அமைய வேண்டும். எனவே இது ஒரு தேசிய விடுதலைப் புரட்சி என்ற புரிதலோடு பாட்டாளி வர்க்க அரசியலமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் அமைந்த ஒரு மக்கள் படை அனைத்து நேச வர்க்கங்களையும் கொண்ட ஐக்கிய முன்னணி ஆகியவற்றைப் பெற்று ஒரு நீண்ட காலயுத்தம் என்ற கண்ணோட்டத்தோடு கொரில்லா யுத்த பாதையில் அதாவது நீண்ட கால யுத்தப் பாதையில் படிப்படியாக வெற்றிகளை வாரிக்குவித்து முன்னேறிச் செல்ல வேண்டும் குறுக்கு வழியில் வெற்றிபெறலாம் என்ற வகைப்பட்ட எந்த குருட்டுத்தனமான முயற்சியும் நமக்கு வெற்றியை நிச்சயமாய்த் தராது.

இன்று பல்வேறு குழுக்களிடையேயான ஆயுதமேந்திய மோதுதல்களும், ஒவ்வொரு குழுவினுள் தோன்றும் முரண்பாடுகளைக் கூட பகைமுரண்பாடாய் பாவித்து படுகொலைகள் நடத்தப்படுவதும் மன்னிக்க முடியாத கொடுங் குற்றங்களாகும்.

இவைகள் புல போராளிக் குழுக்களின் தலைமை பாசிசத் தன்மைக் கொண்ட ராணுவ வெறிவாதம் தலைக்கேறிய குட்டி முதலாளியத் தலைமையாக தரங்கெட்டு வருவதையே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது அமைப்பு ரீதியில் உள்ளெழும் பிரச்சினைகளை நேசபூர்வமான முரண்பாடுகளாக பாவித்து உட்கட்சி விவாதங்களின் மூலம் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் மார்க்சிய, லெனினியப் பாங்கில் தீர்த்துக் கொள்வதற்கு மாறாக ஒருவர் பளுவில் மற்றவர் வாளைச் சொருகுவது இப்போது வீரதீரப் பிரதாபத்தை காட்டுவதாக இருககலாம். ஆனால் தொலை நோக்குப் பார்வையில் போராளிகளின் விடுதலை இயககத்தை பலவீனப் படுத்துவதும் பொது எதிரிக்கு உர மூட்டுவதுமே ஆகும். இதன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

மூலம் ஈழவிடுதலைப் புரட்சியை ஏகாதிபத்திய பலி பீடத்திற்கு அனுப்புவதிலேதான் கொண்டு விடும். இதை இப்போதேனும் ஒவ்வொரு ஈழப் போராளியும் உணரவேண்டும். நாம் நமக்கிடையே தோழமையை, நேசத்தை பாசத்தை பெருக்கிக் கொள்வோம். நமக்குள்ளே விரிவான ஜனநாயக நெறிமுறையை வெகு ஜனப் பாதையை பயன்படுத்துவோம். அதன் மூலம் மட்டுமே எதிரியை நம்மால் முற்றாகப் பகைக்கவும் தோற்கடிக்கவும் முடியும்.

இன்றைக்கு பல்வேறு ஈழப் போராளிகள் குழுக்களிலும் புரட்சி ஒன்றையே லட்சியமாய் கொண்ட விடுதலை ஒன்றையே நோக்கமாய் கொண்ட ஆயிரமாயிரம் சிகப்புச் சூரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஐக்கியத்தையே விரும்புகிறார்கள். தங்கள் நரம்புகளின் கோர்வையைப் போல் எதிர்காலத்திலேனும் எதிரிக்கெதிராக ஐக்கியப் படுத்திக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையிலேயே அவர்கள் தியாக வேள்விக்கு தங்களை ஆகுதியாக்கி வருகின்றனர். இந்த ஐக்கியத்தை உடைக்கும் ஐந்தாம் படைகளை அடையாளம் காணும் ஆற்றல் அவர்களிடையே பெருகி வளர்ந்து வருகிறது. எதிர்கால தமிழ் ஈழத்தின் விடுதலை என்ற லட்சியமானது இந்த இளம் புரட்சியாளர்களை மட்டுமே சார்ந்திருக்கிறது. ஏனெனில் அவர்கள் சரியானவர்கள். அவர்களின் லட்சியங்கள் நியாயமானவை.

அதோ அந்த லட்சிய வீரர்கள் கனத்த இயந்திரத் துப்பாக்கிளை நெஞ்சிலே அணைத்துக் கொண்டு தங்களின் இருப்புக் காலடிகளை விடுதலைப் பாதை என்ற ராஜ பாட்டையில் கம்பீரமாக பதித்த வண்ணம் அதோ எதிரிகளின் நெஞ்சங்களை குறிபார்க்கின்றனர்.

அந்தத்துப்பாக்கி வேட்டுகள் விடுதலையை வென்றெடுக்கப் போகும் பூபாள ராகங்கள்!

மதவெறிவாத, இனவெறிவாத அரசை துளைத்துக் கொல்லப்போகும் எரியீட்டிகள்.

ஏகாதிபத்தியச் சாத்தான்களின் தொடைகளை பிளந்து உயிரை மாய்க்கப் போகும் தீக்கொழுந்துகள்.

மக்கள் ஜனநாயகத்தை, தமிழ் ஈழத்தை பெற்றுத் தரப்போகும் ஒரு பிரசவ வேதனையால் தமிழ் ஈழச் சமூகம் துடிக்கிறது. தமிழ் ஈழம் விஞ்ஞான பூர்வமான ஆயுதப் புரட்சியின் வெற்றிக்கு ஓர் எடுத்துக் காட்டாய் ஒரு சிகப்பு ரோஜாவைப் போல் அழகொழுக கம்பீரமாய்த் துவங்கப் போகிறது.

தமிழ் ஈழப் போராளிகளே, நமது கனவுகளின் கனவாய், நமது லட்சியங்களின் லட்சியமாய் நாம் காதலிக்கும் அந்தத் தமிழ் ஈழத்தை நாம் வென்றெடுக்கப் போகும் நாள் தொலைவில் இல்லை.

\- விடுதலை போராட்டங்கள்
தோற்றதில்லை!
துரோகிகள் வென்றதில்லை!
இதுவே வரலாறு.
எனவே... நமக்கேது தோல்வி!

---

"நாங்கள் இதை மறந்து விடுவோம் என்று எதிர்பாராதே கிழட்டுஜென்மமே! நான் இல்லாவிட்டால் வேறொருவன் உன்னிடமில்லா விட்டால் உன் குழந்தையிடம் இந்த அவமானத்திற்காக வஞ்சம் தீர்ததுக் கொள்வோம்; அது மட்டும் ஞாபகம் இருக்கட்டும்! நீங்கள் உங்களது. இரும்பிலான கோரகங்களால் (தோழர்கள்) மக்களது, மார்பகங்களை உழுது பிளந்தீர்கள்; அங்கு பகைமையை விதைத்தீர்கள். எனவே பகைமைக்கு பகைமைதான் பயிராக விளையும். எங்களிடம் இரக்கத்தை எதிர்பார்க்காதீர்கள் பிசாசுகளே!"

'தாய்' நாவலில் மக்ஸிம் கார்க்கி

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

பின் அட்டை தொடர்ச்சி

பரதன் சிறிது நேரம் யோசனைக்குபின் எங்கோ தூரத்தில் தனியாக மின்னிக் கொண்டு இருந்த நட்சத்திரத்தை பார்த்துக் கொண்டே ''இந்த மிருகத்தனமான தலைமைக்கு அஞ்சி நாங்களும் இந்திய தெரு வீதிகளில் நாய்களாக அலைகிறதை காட்டிலும் இதற்கு எதிராக போராடத்தான் வேனும்,''

ஆமாம் பரதன்! எங்களோட நெருக்கமாக பழகும் தோழர்களுடன் பிரச்சனைகளை பேசி தெளிவான நிலையை ஏற்படுத்தனும். நாம் விவாதிக்கிறதை அறிக்கையாக தயார் செய்து இந்த தலைமைக்கும் சகல தோழர்களுக்கும் தெரியப்படுத்தனும்.''

''ஈழமக்களின் விடுதலைக்கு எந்த வகையிலும் பிரயோசனப் இல்லாமலும்...விடுதலையே தமது ஒரே இலட்சியமென கொண்டு ஆயுதம்பயிற்சிக்கு வந்த தோழர்களையும் வீரியம் இழக்க செய்து...விடுதலைப் போராட்டத்தின் மேல் கூட விரக்தியை ஏற்படுத்தின'' இந்த தலைமையை தகர்த்தாகனும், சரியான தலைமைப்பாத்திரத்தை எங்கட இயக்கம் கைப்பத்தனும்! அப்பதாண்டா...

அவர்கள் சட்டென பேச்சை நிறுத்த வேண்டியதாயிற்று. அருகில் சென்ற தோழர் சற்று தூரம் சென்றதும் மீண்டும் தொடர்ந்தனர்.

''இதனால் எற்படக் கூடிய உயிர் இழப்புக்கள் கொஞ்சம் கூடியதாக இருந்தாலும் அராஜகத்தை எதிர்த்த ஈழமக்களின் விடுதலைக்கான செயல் இது என்கின்ற போது உயிர் இழப்புக்கள் கூட சாதாரணம்தான்''

ஆனால் ஒன்று! துரோகிகள் வென்றதில்லை; உண்மைக்கும் நேர்மைக்கும் விடுதலைக்குமான போராட்டம் வெற்றியைத் தவிர வேறு எதையும் கண்டதில்லை.

---

## புதிய திசையில்

மககளின் துயரும்
எதிரியின் கொடுமையும்
உன்னைச் சித்திக்கவைக்கும்
உனது கண்களில் ஆவேசம் தெரியும்.
ஒரு புத்தகம்
ஒரு துப்பாக்கி இரண்டுமே
தமகுள் பிரிவே இன்றி
உனது கரங்களில் சிரித்து நிற்க்கும்.
இலட்ச்சிய வெறி உன்னுள் நிறையும்
உனது பாதை சரியாய் அமைய
பயணச் சுவடுகள்
எமது மண்ணை இறுக்கிச் செல்லும்.
உனது மனதுள்
ஆயிரமாயிரம் இலட்சியங்கள்
அவற்றில்
உனது வெற்றி
வெற்றியின் பின் உனது வாழ்வு
மக்களின் மலர்ந்த முகங்கள்
இவையும் நிட்சயமானவை.
உன் பாதை
ஆபத்துக்கள் நிறைந்தது
தியாகங்கள் மிகுந்தது
அதில்
உன் உயிரும் பறிக்கப்படலாம்.
ஆனால்
நீ இதைப்பற்றி நினைக்க விரும்பாய்
வெற்றி
பின்னைய விளைவு
மக்களின் மலர்ந்த முகங்கள்
அதைத்தான் நானும் நினைக்கின்றேன்.
உனது வாழ்வு
வெற்றிவரை இருந்து
வெற்றியிலும் வாழ வேண்டும்
உனது பயணம் தொடரும்
எதிரியின் துமுக்கி இருப்புக்கள் அறிந்து
சூழ் நிலை கருதி
பதுங்கியும் விலகியும்
முடியாத போது தகர்த்தும்
உனது அடிகளை
உறுதியாய் பதித்து
மகிழ்வாய் செல்கையில்.
உன்னைப் போலவே புறப்பட்ட
உனது நண்பனின்
துமுக்கி யொன்றும்.
உன் முதுகை நோக்கின்
நிறுத்துங்கள்
மறு பேச்சு வேண்டாம்.
உடலின் ஒவ்வோர் நரம்பும்
துடிக்கின்றன
மக்களை வழிநடத்தி
விடுதலையை வென்றெடுக்கவா.
புறப்பட்டீர்?
நேர்மையும், உண்மையும்
உங்களிடம் இருந்தால்
தேடுங்கள்
பெரிய தவறு உள்ளே உள்ளது
தவறை களையுங்கள்
அஸ்திவாரம் கூட தகர்க்கப்படலாம்
ஆனால் உங்கள்
தவறை சாக்க
அஸ்திவாரத்தை அழிக்காதீர்கள்
இனியேனும்
உறுதியாய் திருப்பி கட்டுங்கள்
மக்களின் பலத்தையும்
என் மண்ணையும்
நிச்சயமாய்
முன்பு போல் மறந்து விடாதீர்,



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# உடமை இழந்தோம்
# உரிமை இழந்தோம்
# உணர்வை இழக்கலாமா?.,.

**எம்மைப் பற்றியோர் சுருக்கமான அறிமுகம்:-**

கழகத்துனுள் புரட்சிகர தேசிய இயக்கம் ஒன்றின் அமைப்பிற்காக உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் அரசியல் போராட்டம் நடத்திவரும் இடது சாரி கருத்துடையவர் களின் கருத்து ரீதியான பிரதி பிம்பமே நாமாகும். இன்னமும் தனித்துவமானதும் திட்டவட்டமானதுமான ஸ்தாபன வடிவ மெடுத்து விடவில்லை. அதற்கான கருநிலை யிலும் அமைப்பு ரீதியான ஒன்றினைவற்ற நிலையிலும் நாம் உள்ளோம். உள்ளமைப்புப் போராட்டத்தின் மூலமும் வெளியில் இருந்து நடத்தும் அரசியல் போராட்டத்தின் மூலமும் கழகத்தினூடாகவும் வெளியாகவும் செய்து வரும் வேலைகள் ஊடாகவும் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம்.

**கழகத்துக்குள்ளான உள்ளமைப்பு போராட்ட வரலாறு.**

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உட் போராட்டத்தின் ஆரம்பம் என்பது அரசியல் கட்சியின் அவசியத்தை நோக்கமாக கொண் டும் தனிநபர் பயங்கர வாதத்தை எதிர்த்துமே இக்கருத்துப் போராட்டம் நடைபெற்றது. இக்கருத்துக் கொண்டவர்கள் ஓரணியில் திரண்டார்கள். இவர்கள் வெளியேறி 'புதிய பாதை' என்ற பத்திரிகை ஒன்றையும் வெளி யிட்டார்கள். இது பெருமளவு மார்க்சிச, லெனினிசக் கருத்துக்களை கொண்டதாக இருந்தது. அதே நேரத்தில் தலைமைத்துவத் துக்கான போட்டியும் விடுதலைப் புலிகளுள் நடைபெற்றிருந்தது. இதன் விளைவே உமா மகேஸ்வரன் விடுதலைப் புலிகளில் இருந்து விலக்கப்படுகிறார். அதே நேரத்தில் தமிழர் விடுதலை கூட்டணியினருடன் இணைந்து அதன் அங்கமாக செயற்பட்டு வந்த தமிழ் இளைஞர் பேரவையின் ஒரு பகுதியினரும் உட் போராட்டத்தின் விளைவாக வெளியேறு கின்றார்கள். இவர்கள் பாராளுமன்ற பாதை யையும் தனிநபர் பயங்கரவாதத்தையும் எதிர்த்து வெளியேறியவர்களாகும். இது மாத்திரமல்ல. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இடது சாரி கருத்துக் கொண்டவர்களும் சேர்ந்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் உருவாகிறது. இவர்கள் அனைவரும் சேர்ந்து அடுத்த கட்டத்தில் புதிய பாதையை நகர்த்துகிறார்கள்.

அதன் பின் விடுதலைக் கூட்டணியுட னும் விடுதலைப்புலிகளின் சுத்த இராணுவச் செயல்பாடுகளுடன் முரண்பட்ட பல்வேறு ஜனநாயக தேசபக்த அணியினரும் பாரம்பரிய இடது சாரிக் கட்சிகளுடன் முரண்பட்டு வந்த பல்வேறு அணியினரும் இடது சாரிக் கருத் தோட்டத்தைக் கொண்ட பல புதிய அணியின ரும் படிப்படியாக த. ம. வி. கழகத்துடன் தம்மை இணைத்துக் கொண்டார்கள். 1984ம் ஆண்டு வரை கழகம் தனது வளர்ச்சிக் கட்டத் திலேயே இருந்தது.

1983ம் ஆண்டில் ஏற்பட்ட திடீர் வளர்ச்சி யில் அந்நிய சக்திகளை சார்ந்து இருந்ததால் ஏற்பட்ட நிலையும் விரைவான, பரவலான இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கான தயாரிப் பும் விடுதலைப் புலிகளுடனான கருத்துப் போராட்டத்தை சிறுமைப்படுத்தியது. குறுந் தேசிய வாதத்திற்கும் சுத்த இராணுவ வாதத் திற்கும் எதிராக, ஒரு கருத்துப் போராட் டத்தை நடத்துவதற்குப் பதிலாக, விடுத லைப் புலிகளுடனான ஒரு கோஷ்டிச் சண்டை யாக குழுவாத முரண்பாடாக, பகைமையாக மாறியது. இதன் காரணத்தால் ஸ்தாபனமும் (கழகமும்) சித்தாந்த ரீதியில் வளர்வதற்கான வாய்ப்பை இழந்தது. இதைப் போலவே இடது சாரித்தன்மை கொண்ட ஏனைய இயக் களுடனான உறவும் கருத்து முரண்பாட்டின்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அடிப்படையில் அமைவதற்குப் பதிலாக கோஸ்டிவாத போராட்டத்தின் அடிப்படையிலானதாக அமையத் தொடங்கியது. இதன் காரணத்தால் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து இடதுசாரி அணியினரும் ஜனநாயக விரும்பிகளும் தேசபக்தர்களும் தனி ஒரு முகாமாகத் தமிழீழ தேசிய விடுதலை போராட்டத்தில் திரள்வதில் இருந்து பல முகாம்களாகப் பிளவுபட்டார்கள்.

கழகத்தினுள் 1984ம் ஆண்டில் இருந்து உள்போராட்டம் ஆரம்பமானது. இடதுசாரி போக்கு உடையவர்களும் தமக்குள் தெட்டத் தெளிவான வேலைத் திட்டத்துடன் ஒன்றுபட்ட நிலையில் உட்போராட்டதை நடாத்தும் அளவிற்கு வளர்ந்து இருக்கவில்லை. ஆனால் அங்கொன்றும் இங்கொன்றுமாக பல்வேறு அங்கங்களிலும் துறைகளிலும் குறிப்பிட்ட சிற்சில பிரச்சனைகளை ஒட்டி போராட்டம் வளர ஆரம்பித்தது. இராணுவ உருவாக்கம்சம்பந்தமாக கழகத்துனுள் எந்த அணியினருக்குமே தெளிவானவிளக்கம்இருக்கவில்லை. 1983ம் ஆண்டுக்கு முன்பு வரை கழகம் சிறு கொரில்லாக் குழுக்களைக் கொண்டதாகவே இருந்தது. இவை அரசியல் செயல்பாடு உடையனவாக இருந்தது. இதனால் கழகத்தின் அரசியல் தலைமைக்கு தனது இராணுவத்தைக் கட்டுப்படுத்துவது சிரமமாக இருக்கவில்லை. இராணுவ அமைப்பு சம்பந்தமாக விசேட அறிவு எதுவும் அவசியப்படவில்லை.

ஆனால், 1983ம் ஆண்டுக்குப் பின் எவ்வித முன் அனுபவமும் மூன் தயாரிப்பும் படிமுறையானவளர்ச்சியும் இன்றி ஒரு பெரும் நிரந்தர இராணுவப் படையை நிர்வகிக்க வேண்டி வந்தது. கட்டுப்படுத்தி தலைமை தாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்படையில் சேர்ந்த அங்கத்தினர்கள் கூட அரசியல் உணர்வு பெற்ற வர்களோ அல்லது யுத்தத்திற்கான பயிற்சியைப் படிப்படியாகப் பெற்று வந்தவர்களோ அல்ல.

இனவாத உணர்வுடனும் சிங்கள இராணுவத்துக் கெதிரான பழிவாங்கும் உணர்வுடனும் தற்காப்பு உணர்வுடனும் வீட்டை விட்டு ஓடிவந்த அல்லது ஓட நிர்ப்பந்திக்கப்பட்ட இளைஞர்களாகும். இவர்களில் மிகச் சிறு அளவினர் அரசியல் உணர்வு பெற்று இருந்தது உண்மையே.

இதன் காரணத்தால் குறுந்தேசியவாதிகளின் கை ஒங்குவதற்கான வாய்ப்புக்களே கூடுதலாக இருந்தது. அத்துடன் இராணுவத்தின் மனோநிலையை மக்கள் இராணுவத்திற்கு உரிய மனோநிலையாக நெறிப்படுத்துவதற்குரிய வேலைத் திட்டமோ இராணுவத்துள் அரசியல் அமைப்புக்களை உருவாக்குவதற்குரிய வேலைத் திட்டமோ எதுவுமே இருக்கவில்லை.

இதன் காரணத்தால் குறுந்தேசிய வாதிகளினதும் சுத்த இராணுவக் கண்ணோட்டம் உள்ளவர்களினதும் ஆதிக்கமே இராணுவத்துக்குள் படிபடியாக வலுவடைந்தது. உமாமகேஸ்வரனே இத்தவறான போக்கின் பிரதிநிதியாகவும் செயல்பட்டார். இராணுவத்தினுள் உமாமகேஸ்வரன் மீதான தனிநபர் வழிபாடும், கண்மூடித்தனமான கீழ்ப்படியும் உணர்வும், அரசியல் உணர்வற்ற தன்மையும் அரசியலை எள்ளி நகையாடும் தன்மையுமே நிலவியது. இராணுவக் கட்டுப்பாட்டை எவ்விதம் நிலை நிறுத்துவது என்பதில் எவருக்குமே விளக்கம் இல்லாதிருந்ததனால் உமாமகேஸ்வரனின் முன் முயற்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஒருங்கமைக்கப்பட்ட எவ்வித எதிர்ப்பும்கழகத்தினுள் இருந்த இடதுசாரி அணியினரிடம் இருந்தும் கிடைக்கவில்லை. இந் நிலையை இராணுவத்தினுள் கொண்டு வருவதற்கு கடுமையான சித்திரவதைகளும் உட் கொலைகளும் கூட பிரயோகிக்கப்பட்டன. இராணுவத்தின் இந்நிலையினால் உமாமகேஸவரனைச்சூழ ஒரு சித்திரவதைக் கும்பலும் தனிநபர் விசுவாசிகளும் உருவாக்கப்பட்டார்கள். இவர்களே இன்று கழகத்தினுள் அராஜகவாதிகள் எனப் பொதுவாக அழைக்கப்படுகிறார்கள். ஆரம்பத்தில் இராணுவத்தினுள் மாத்திரம் இருந்த இவர்களின் ஆதிக்கம படிப்படியாக கழகத்தின் அனைத்து அங்கங்களிற்கும் பரவியது, வெகுஜனங்களினுடனான உறவிலும் இவ்வித இராணுவ நடவடிக்கை செல்வாக்கு செலுத்த-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

ஆரம்பித்தது. இதன் ஒட்டு மொத்த விளைவு மக்கள் இராணுவம், விடுதலை இராணுவம் என்ற பெயரில் உமாமகேஸ்வரன் தலைமையிலான ஒரு இராணுவ ஜீண்டாஸ் ஒன்று உருவாகியதேயாகும்.

ஏற்கனவே கூறியதைப் போல பல உள்ளமைப்புப் போராட்டங்களை நசுக்குவதன் மூலமே உமாமகேசுவரனால் இந் நிலைக்கு வரக் கூடியதாக இருந்தது. 84 இன் ஆரம்பத்தில் இருந்து பல உள் போராட்டங்கள் நடைபெற்றாலும் இவற்றில் சிலவே திருப்புமுனைகளாக அமைந்தவைகளாகும்.

கழக இராணுவத்தை மக்கள் இராணுவமாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் உட்கட்சி ஜனநாயகத்தை வலியுறுத்தியும் இராணுவ முகாம்களின் அரசியல் போதனை யூட்ட வலியுறுத்தியும் 84ம் ஆண்டு ஒரு போராட்டம் நடைபெற்றது. இது மிக மோசமாக அடக்கி ஒடுக்கப்பட்டது. இப் போராட்டத்தின் தொடர்புபட்ட சிலதோழர்கள் மாதக்கணக்காக சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார்கள். சிலர் கொல்லப்பட்டார்கள். இச் சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவத்துள் ஜனநாயகம் அடியோடு அழிக்கப்பட்டது. கழகத்துள் தோழர் என்னும் சொல் தடைவிதிக்கப்பட்டது. இதன் மறுவிளைவாக இராணுவத்தினுள் இருந்த தோழர்களை கடுமையாகவும் சிந்திக்கத் தூண்டியது. இது முதலாவது திருப்பு முனையாகும்.

II கழகத்தை ஒரு அரசியல் ஸ்தாபனமாக மாற்ற வேண்டும், அதற்கான அரசியல்யாப்பும், ஸ்தாபன யாப்பும் முன் வைக்கப்படல் வேண்டும் தனிநபர் தலைமை நிராகரிக்கப்பட்டு கூட்டுத் தலைமை உருவாக்கப்பட வேண்டும். போன்ற கோரிக்கைகளை முன் வைத்து பின்தளத்தில் மத்திய ஸ்தாபன மட்டத்தில் உட்போராட்டம் நடந்தது. இவர்கள் உயிர் பயமுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதாலும், சில தோழர்கள் கொல்லப்பட்டதாலும் கழகத்தை விட்டு வெளியேறி தலைமறைவாக வாழ்ந்து கொண்டே அரசியல் போராட்டம் நடத்தும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இது, இரண்டாவது திருப்பு முனை.

(இரண்டாவது திருப்புமுனையில் சம்பந்தப்பட்ட தோழர்கள் சிலர் முதலாவது திருப்புமுனை சம்பந்தப்பட்ட போராட்டத்தை தலைமையுடன் சேர்ந்தே நசுக்குவதற்கு எதிர்மறைவில் உதவினார்கள் என்பது கவனத்திற்குரியது. "நசுக்குவதில் தலைமையுடன் சேர்ந்து என்பதன் பொருள்." முதலாவது திருப்பு முனையை தலைமை நசுக்குவதற்கு எவ்வித எதிர்ப்பும் நேரடியாக தெரிவிக்கவில்லை என்பதோடு, நசுக்கும் முயற்சியிக்கு தலைமை எடுத்த நடவடிக்கைகளுக்கும் மௌனம் சாதித்தப்படியே ஏற்றுக்கொண்டனர் என்பதாகும்.)

III தளத்தில் பல்வேறுபட்ட தவறுகளுக்கு எதிராகவும் உமாமகேஸ்வரன் தலைமையிலும் மத்திய சூழுவிலும் நம்பிக்கை இன்மை தெரிவித்து நடைபெற்றதள மாநாடு மூன்றாவது திருப்பு முனையாகும். தள மாநாட்டின் தீர்மானத்தின்படி பின் தள மாநாடு ஒன்றை கூட்டுவதற்கு உமாமகேஸ்வரன் நிர்ப்பந்திக்கப்பட்டார். என்னவிதத்திலாவதும் தனது தலைமையை விட்டுக் கொடுக்காத ஜனநாயக தன்மையற்ற மாநாட்டை கூட்ட முற்பட்டார். இதன் விளைவாக கழகத்தில் இருந்து அனைத்து இடதுசாரிகளும் கணிசமான அளவு ஜனநாயக அணியினரும் கூட உமாமகேஸ்வரன் தலைமையை நிராகரித்து வெளியேறினர். தள மகாநாட்டால் தேர்ந்தெடுக்கப்பட்ட தளத்தின் அனைத்து வேலைகளுக்கும் பொறுப்பான அரசியல் கமிட்டி கூட இவ்விதமே செய்தது. இக் கமிட்டி முழுமையும் இடதுசாரி போக்குள்ளவர்களைக் கொண்டதல்ல என்பதை கமிட்டியின் போக்கே காட்டியுள்ளது.

IVa. இத் திருப்பு முனையின்போது மற்றொரு நிகழ்ச்சியும் ஏற்பட்டது. அராஜகவாத அணியும் கூட இருமுகாம்களாகப் பிளவுப்பட்டது. ஆனால் கழக அராஜகவாத முகாமுக்கு எதிராகப் போராட்டத்தை நடத்தியவர்கள் ஓர் முகாமாகவில்லை என்பதும் அராஜகவாத முகாமே இரு முகாம்களாகப் பிரிந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்பிளவு உமாமகேஸ்வரன் தலைமையிலான அராஜகவாத



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அணியை பலவீனப்படுத்தியது. முகுந்தனுடன் முரண்பட்ட மற்றைய முகாம் முகுந்தனை வீழ்த்துவது என்ற குறுகிய கால்த் திட்டத்தின் கீழ் முகுந்தன் தலைமையை நிராகரிக்கும் போராட்டத்தில் தன்னையும் நிறுத்தியுள்ளது. இது இன்னமும் குறுந்தேசிய வாதப் பாணியிலே கால் ஊன்றியுள்ளது. உமா மகேஸ்வரனின் அதிகாரத்துவ தலைமையினால் கழகத்தை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட அனைவரையும் உள்ளடக்கிய மாநாடாக பின் தள மாநாட்டை நடத்த இவர்களும் இணங்கி இம் மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இம் மாநாடு நான்காவது திருப்பு முனையாக இருக்கும்.

(b) இம் மாநாடு ஜனநாயகத் தன்மை பெற்றதாகவும் கருத்துச் சுதந்திரம் மிக்கதாகவும் ஓர் உத்வேகமான புரட்சிகரப் போக்கு கொண்டதாகவும் நடத்தி முடிக்கப்படுமானால் இது கழகத் தலைமையுடன் இது வரை காலமும் முரண்பட்டுப் போராடி வந்த கழகத்தினுள் இருந்தும் கழகத்திற்கு வெளியில் இருந்தும் அரசியல் ரீதியாகப் போராடி வரும் அனைத்து அணியினரையும் தனித்துவமான ஓர் அமைப்பாக ஸ்தாபனப் படுத்தும் ஒன்றாக அல்லது அதற்குஅவசியமான அரசியல் தளத்தை இடும் ஒன்றாக இம் மாநாடு இருக்கும் என்பது நிட்சயமானது.

இது தான் கழகத்தின் தவறான அரசியல் மாற்றத்திற்கு எதிராக நடந்து வந்த அரசியல் போராட்டத்தின் சாராம்சமாகும். இது இடது சாரி அணியினரின் அரசியல் நெறிப்படுத்தலில் ஜனநாயக அணியினருடன் சேர்ந்து நடந்து வந்த இவ்வரசியல் போராட்டமானது பின்வரும் அரசியல் இலக்குகளைக் கொண்டிருந்தது.

1. இராணுவத்தை புரட்சிகாரமாக்குவது.
2. இராணுவத்தை அரசியல் தலைமையின் கீழ் கொண்டுவருவது.
3. ஜனநாயக மத்தியத்துவம் உள்ள முறையிலான அரசியல் ஸ்தாபனம் ஒன்றை அமைப்பது.
4. அராஜகவாதத்தை அழிப்பது.

(அராஜக வாதம் என்று கழகத்துள் பெரும்பான்மை கருதுவது இராணுவ ஒழுங்கையும் ஸ்தாபன ஒழுங்கையும் நிலை நிறுத்துவதற்கான ஸ்தாபன இராணுவ ஒழுங்கு நடவடிக்கையை மிலேசத்தனமான முறையில் எடுக்கப்படுவதாகும்)

ஆனால் இடது சாரி அணியினரின் நோக்கம் இதற்கும் அப்பாற்பட்டதாகும். இது என்ன என்பதை அவதானிக்கும் முன் தற்போது தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் செயற்பாடுகள் முகம் கொடுக்கும் புற நிலைப் பிரச்சினைகள் என்ன என்பதையும் அதற்கான தீர்வு பற்றிய எமது அபிப்பிராயங்கள் என்ன என்பதுபற்றியும் கூறுவதற்கு அனுமதி கோருகிறோம். அப்போதுதான் உங்களுக்கு எங்களை புரிந்து கொள்ள இலகுவாகும்.

(a) தமிழ் தேசிய இனத்தின் அரசியல் செயல்பாடு முகம் கொடுக்கும் புற நிலைப் பிரச்சனைகளில் முதலாவதும் பிரதானமானதும்,இலங்கை இந்திய முதலாளித்துவவர்க்கங்களுக்கிடையில் ஏற்பட்டுவரும் நேச உறவே ஆகும். இது போராட்டத்தின் பிரதான பங்கு வகிக்கும் நிலைக்குள்ளாகியதன் காரணம் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கங்கள் இந்திய முதலாளித்துவ அரசியல் மேல் கட்டுமானங்களின் முழுமையாகவே சார்ந்து இருப்பது தான். இவ்வித சார்புநிலை ஒன்றை உருவாக்கியது இந்திய அரசின் திறமையினால் என்பதை விட, (மத்திய, மாநில) தேசிய விடுதலை இயக்கங்களின் தவறான அரசியல் இராணுவக் கண்ணோட்டத்தினாலேயே என்று சொல்வது சாலப் பொருந்தும்.

(b) இந்திய முதலாளித்துவ வர்க்கம் இன்று பெருமளவு ஏகாதிபத்திய முகாமை நோக்கி சாரும் திசை வழியில் சென்ற வண்ணமுள்ளது, ஏகாதிபத்தியங்களுடன் தன்னை இணைத்துக் கொள்வதை நோக்கி அது வேகமாக முன்னேறிச் செல்கிறது. இராணுவக் கூட்டில் இந்திய அரசு திசை திரும்புவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகவே அமெரிக்கா சார்பு இலங்கை அரசுடன் அதற்கு எவ்வித பகை முரண்பாடும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. கடந்த காலங்களில் இதை உணராதவர்களும் உணர்ந்து மறுத்தவர்களும் கூட அண்மை காலத்தில் நடந்து கொண்டு இருக்கும் பல்வேறு சம்பவங்கள் இவர்களையும் கூட மீளாய்வு செய்ய வைத்துள்ளன. இரு அரசுகளும் படிப்படியாக மிகவும் நெருங்கிய நண்பர்களாக மாறுவதற்கான சாத்தியப்பாடுகளே உள்ளன. இந்நிலையில் இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் குரல்வளேயை நசுக்குவதில் இரு அரசுகளும் கூட்டுச் சேர்ந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. இந்நிலைமையைதற்போது காணக்கூடியதாக உள்ளது. 1947 இல் மலையக மக்களின் வாக்குரிமையை பறிப்பதில் இலங்கை அரசும் இந்திய அரசும் கூட்டுச் சேர்ந்தே செயற்பட்டன. 1964 இல் சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தம் கூட்டுச் சேர்ந்தே தயாரிக்கப்பட்டது. 1971 இல் சிங்கள இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சியை இரண்டு அரசுகளும் சேர்ந்தே நசுக்கினார்கள். இவ்விதமான கூட்டு மீண்டும் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. இது நடைபெறுமானால் தமிழீழ போராட்டத்தில் உள்ள அனைத்து முற்போக்கு சக்திகளும் அழிக்கப்படுவதும், அடக்கப்படுவதும் பிற்போக்கு முதலாளித்துவ சக்திகள் தேசிய இயக்கத்தின் தலைமைக்கு உயர்த்திவிடப்படுவதும் சாத்தியமே.

(c) தமிழ் தேசிய இனத்தின் அரசியல் செயற்பாட்டில் ஆயுதபாணிகளான பிற்போக்கு சக்திகளே ஆதிக்கம்செலுத்தும்நிலை இது இன்று வெறும் இயக்க மேலாதிக்கத்திற்கான செயற்பாடாக இல்லை. அனைத்து முற்போக்கு சக்திகளினதும் அரசியற் செயற்பாட்டை அடக்கும் நோக்கத்துடனேயே இம்மேலாதிக்கம் செயற்படுகின்றது. அண்மைக் காலங்களில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும், (LTTE) தமிழீழ விடுதலை இயக்கத்திற்கும் (TELO) இடையே நடந்த மோதல் மேலாதிக்கத்தை செலுத்த முற்படும் இருபிற்போக்கு சக்திகளுக்கு இடையே நடந்த மோதல் மாத்திரமே ஆகும். இரு சாராரின் தலைமையும் அந்நிய முதலாளித்துவ கையாட்களாகவும், முற்போக்கு வளர்ச்சியை தடுக்கும் பொலீசாகவும் இன்று வளர்க்கப்பட்டு வருகிறது.

(d) கூட்டணியின் ஆதிக்கம் மீண்டும் மேலோங்குதல்:- இங்கு கூட்டணி என்பது இலங்கை தமிழ் ஆளும் வர்க்கத்தின் ஒரு அரசியல் பிரதிநித்துவமாகும் இக்கட்சி 1980 ம் ஆண்டில் இருந்து தமிழ் மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை இழக்க ஆரம்பித்தது. 1983 ல் தமிழ் மக்கள் மத்தியில் எவ்வித மதிப்பும் அற்ற கட்சியாகியது. ஆனால் தமிழ் ஆளும் வர்க்கம் மக்கள் மத்தியில் அரசியல் செல்வாக்கைத்தான் இழந்ததே தவிர பலவீனமான வர்க்கமாகி விடவில்லை. இந்திய ஆளும் வர்க்கத்துடன் பொருளாதார ரீதியில் தம்மை இணைத்துக் கொள்வதன் மூலம் மேலும் சக்தி பெற்றவர்களாக மாறி வருகிறார்கள்.

இன்று இந்திய ஆளும் வர்க்கத்தின் மற்றோர் நம்பகரமான இலங்கை அரசியல் சகாவாக மாறி மீண்டும் அதிகாரத்திற்கு உயர்த்தப்பட்ட வண்ணம் இருக்கின்றனர். ஆகவே முன்னைய கூட்டணியை விட இன்றைய கூட்டணி அரசியல் ரீதியில் மிகவும் ஆபத்தானது. தமிழர் விடுதலைக் கூட்டணி மாத்திரம்தான் தமிழ் ஆளும் வர்க்கத்தின் ஒரே பிரதிநிதி என்பதல்ல. இது அதன் ஒரு பகுதி ஜனரஞ்சகமான பகுதியாகும். இப்பகுதியினர் இந்திய அரசுக்கு சாதகமானவர்கள். இதில் அமெரிக்காவின் நேரடித்தொடர்புள்ள மற்றோர் பகுதியினரும் உண்டு. இது இன்று சந்திரகாசன் ஊடாக பிரதிநித்துவப்படுகிறது இது ஜனரஞ்சகம் ஆகாத பகுதியாகும். இதில் தமிழ் ஆளும் வர்க்கங்கள் அதிகாரத்துக்கு வருவார்களேயானால் ஆளும் வர்க்கங்களின் இவ்விருபகுதியினரும் அரசியல் மேலாதிக்கத்திற்காக மோதிக்கொள்ளக் கூடும். தனிநபர் கொலைகள் கூட நடைபெறலாம். குறுந் தேசிய வாதப் பார்வை உடைய விடுதலை இயக்கங்களை தமக்குள் பங்கு போட்டுக் கொள்வதும் இவ்வியக்கங்களும் தமது



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

சூழலின் அதிகாரத்திற்காக ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளக் கூடும். இம் மோதலை நியாயப்படுத்துவதற்காக "அமெரிக்க எதிர்ப்பு முகாம்" என்று ஒரு சாராரும், "இந்திய எதிர்ப்பு முகாம்" என்று மற்றொரு சாராரும் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்வார்கள்.

e விடுதலை இயக்கங்கள் தமிழீழ மக்களிடம் இருந்தும் இந்திய மக்களிடம் இருந்தும் அந்நியமாகி நிற்றல்:-

ஆயுதப் போராட்டமானது சிறு குழுக்களினால் பின்பற்றப்பட்டு வந்த போராட்ட மார்க்கமாக இருந்தபோது அப்போராட்ட அமைப்புக்கள் மக்களின் அபிமானத்தைப் பெற்று இருந்தன. அதன்பின் ஆயுதப் போராட்டமானது தமிழ்த் தேசிய இனத்தின் பிரதான போராட்ட மார்க்கமாக மாறிய காலத்திலும் கூட இவ்வமைப்புக்கள் மக்களின் பெரும் அபிமானத்தையும் ஆதரவையும் பெற்றிருந்தன. ஆனால் ஆயுதப் போராட்டத்தை, மக்கள் யுத்தமென்ற உயர்ந்த மட்டத்திற்கு மாற்றவேண்டிய இவ் அமைப்புக்கள் இன்று மக்களின் வெறுப்புக்குள்ளாகி அந்நியப்பட்டு நிற்கின்றன. தமது கைகளில் உள்ள ஆயுத பலத்தை பிரயோகித்தே மக்களின் ஆதரவையும் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இத்தகைய தவறுகளின் காரணத்தால் இவர்கள் மேலும் மேலும் இந்திய முதலாளித்துவ, அரசியல் மேல்கட்டுமானத்தில் தஞ்சம் புக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

f சிங்கள மக்களைத் தாக்குதலும், இயக்க உட்கொலைகளும் இயக்கங்களுக்கிடையிலான மோதல்களும் இதனால் விடுதலை இயக்கத்திற்கான மதிப்பை அனைத்து மக்கள் மத்தியிலும் இழந்திருத்தல். இந்திய ஆளும், வர்க்கத்திடம் இருந்து தமது தனித்துவத்தை சரியாகப் பேணிக்கொள்ளக் கூடிய விதத்தில் நடந்து கொள்ளாததால் சிங்கள மக்கள் மத்தியில் ஓர் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்த் தேசிய இயக்கத்தை ஓர் ஆக்கிரமிப்பு இயக்கமாக நோக்க நிர்ப்பந்தித்துள்ளது.

g விடுதலை இயக்கங்கள்மேல் உள்ள வெறுப்பாலும் அவ நம்பிக்கையாலும் மக்கள் தமது விருப்பத்துக்கு மாறாகவே சமரசத் தீர்வுக்கு தயாராக உள்ள மனோநிலையாகும்.

h விடுதலை இயக்கங்களின் நடவடிக்கையால் முஸ்லீம் மக்கள் தமிழ்த் தேசிய இயக்கத்தையே பகைமையாக பார்க்க ஆரம்பித்துள்ள நிலை. இதனால் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற கோரிக்கையின் அரசியல் உறுதிப்பாட்டிற்கு பாதகமான நிலைமை தோன்றியுள்ளது.

i மலையக மக்களை அணிதிரட்டத் தவறியமை.

இங்ஙனந் தேசிய இயக்கங்களின் வர்க்க சுபாவத்தின் காரணமாகவும் மலையகமக்களின் தனித்துவமான தேசிய இனப் பிரச்சனைகளுக்கு பொருத்தமான தீர்வை முன்வைக்க தவறியதன் காரணத்தாலும் மலையக மக்கள் தமிழ்த் தேசிய இயக்கத்தின் துணைச் சக்தியாக ஆக்கப்படாமை. இவை தான் தற்போது பிரதான புறநிலைகளாகும். இவை பாதகமாகவே உள்ளன. இப் பாதக நிலைமைகளின் காரணத்தால் தமிழ்த் தேசிய இயக்கங்கள் வீழ்ச்சியடையப் போவதும், முற்போக்கு சக்திகளை அழிப்பதையும் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுப்பதையும் நோக்கமாகக் கொண்ட மிக மோசமான அரசு தோன்றப் போவதும் எதிர்பார்க்கக் கூடிய ஒன்றே. இந் நிலையை வரவிடாமல் தடுக்கும் பலமோ, திறனோ எந்த தேசிய இயக்கத்திற்கும் இல்லை, இதனால் வீழ்ச்சிக்கு முகம் கொடுத்தே விடுதலைப் போராட்டத்தை தொடர வேண்டியுள்ளது.

"தொடர்ந்து நடத்த வேண்டிய பயணத்தில் எமக்கு அவசியமானவை

1. தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தையும் வர்க்க விடுதலைக்கான போராட்டத்தையும் இணைத்துச் செயல்படக் கூடிய ஆயுதப் போராட்டத்தை—பிரதான போராட்ட வடிவமாகக் கொண்ட ஓர் அரசியல் அமைப்பு.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

ஒரு செங்குத்தான கடினமான பாதையிலே ஆளுக்கு ஆள் கை கோர்த்துக் கொண்டு ஒரு நெருக்கக் கட்டுள்ள குழுவாக நடைவிட்டுக் கொண்டிருக்கின்றோம். எல்லாப்பக் கங்களிலும் பகைவர்கள் நம்மைச் சூழ்ந்துள்ளார்கள். அவர்களின் அனேகமாக இடையறாத தாக்கு தலுக்கு எதிரே நாம் முன்னேற வேண்டியுள்ளது. சுயேச்சையாக எடுத் துக் கொண்ட முடிவுப்படி பகை வனை எதிர்த்துப் போராடுவதற் காக நாம் ஒன்று சேர்ந்திருக்கின் றோம். அருகாமையிலுள்ள சதுப்புக் குழியை நோக்கி பின் வாங்குவதற் காக அல்ல. சதுப்புக்குழி வாசிகள் துவக்கத்திலிருந்தே நம்மை குறை கூறி வந்துள்ளனர். நாம் ஒரு தனிக் குழுவாக பிரிந்து கொண்டு போய் விட்டோம் என்று சமரசப் பாதைக் குப் பதிலாக போராட்டப் பாதையை தேர்ந்து கொண்டோம் என்று இப் போது நம்முள் சிலரே "சதுப்புக் குழியில் இறங்கி விடலாம் வாருங் கள்" என்று கூக்குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர். நாம் அவர் களின் மானத்தை வாங்கத தொடங் கினால், "பத்தாம் பசலி ஆசாமி களாக இருக்கின்றீர்களே" இன் னும் மேலான பாதையில் செல் வோம், வாருங்கள் என்று அழைத் திடும் சுதந்திரத்தை எங்களுக்கு மறுக் கின்றீர்களே, "வெட்கமில்லையா உங்களுக்கு" என்று பதிலடி கொடுக் கின்றனர். சரிதான் சீமான்களே எங்களை அழைக்கிற சுதந்திரம் உங்களுக்குண்டு அதுமட்டுமல்ல விரும்பும் இடத்திற்கும் போகவும் உங்களுக்கு உரிமை உண்டு. சதுப் புக் குழிக்கு கூடப் போகலாம். உண் மையைச் சொன்னால் சதுப்புக் குழி தான் உங்களுக்குத் தகுதியான இடம் என்று நினைக்கிறோம். அங்கே போய் சேர்வதற்கு உங் உங்களுக்கு எல்லா உதவியும் செய்ய வும் நாங்கள் தயார். எங்கள் கையை மட்டும் விட்டு விடுங்கள். இழுத்து நிறுத்த வேண்டாம். சுதந்திரம் என்னும் மேன்மையான சொல்லை யும் கறைபடுத்த வேண்டாம். ஏனென்றால் நாங்கள் விரும்பும் இடத்திற்கு போக எங்களுக்கும் சுதந்திரம் உண்டு. சதுப்புக் குழியை எதிர்த்து மட்டுமின்றி, சதுப்புக் குறியை நோக்கி திருப்புகிறவர்களை எதிர்த்தும் போராடும் சுதந்திரம் எங் களுக்குண்டு.

-லெனின்

2. இனி நாம் முகம் கொடுக்கப் போகும் அடக்கு முறையானது அடக்கு முறையின் தன்மையிலும் அளவிலும் முன்னையதை விட மாறுபட்டதாக இருக்கும். ஜனநாயக விரோ தத் தன்மை கொண்ட தமிழ் ஆளும் அணிக்கு எதிராகவும் சிங்களப் பெருந் தேசிய வாதத் திற்கு எதிராகவும், ஏக காலத்தில் போராட வேண்டியிருக்கும். இவ்விரு சக்திகளும் இந்திய ஆளும் வர்க்கத்தின் ஆதரவை பெற்று இருப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆகவே போராட்டம் தன்மையில் முற்றிலும் மாறு பட்டதாகவே இருக்கும். அதன் சர்வதேச பரி மாணம் கூட மாறுபட்டதாக இருக்கும்.

3. இலங்கைத் தீவின் அனைத்து பிரிவு மக்கள் மத்தியிலும் ஓர் இணைப்பை ஏற்படுத் தக் கூடிய விதத்தில் எமது போராட்டங்கள் அமைய வேண்டும் முஸ்லீம் மக்களின், மலை யக மக்களின் தேசிய அபிலாசைகளையும் மதிக்கக் கூடியதாகவே தமிழ்த் தேசிய இனம் ஆட்சியமைப்பு சம்பந்தமாக தனது கோரிக்கை களை முன் வைக்க வேண்டும்.

4. எம் மக்களையும் நேசசக்திகளையும் சார்ந்து நிற்காமல் அவர்களில் இருந்து அந் நியமாகி பகைத்துக் கொண்டு, எமது எதிரி களின் (போலி நண்பர்கள்) சார்ந்து நின்று அவர்களையே நம்பி நடத்திய போராட்ட முறைகள் விமர்சித்து ஒதுக்கப்படல் வேண் டும். சொந்த மக்களிலும் நேசசக்திகளிலும் சார்ந்து நின்று அவர்களை அணிதிரட்டக் கூடிய போராட்ட முறைகள் பின்பற்றப் படல் வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

5. குறுகிய கால வெற்றிகளில் நம்பிக்கை வைத்து இதுவரை செயல்பட்டதை நிராகரித்து தொடர்ச்சியான ஒரு செயற்பாடு உள்ள ஒரு நீடித்த யுத்தத்தை இனியாவது நாம் பின்பற்ற வேண்டும்.

6. விடுதலை இராணுவம் என்ற பெயரில் தனிநபர்களினதும் கோஸ்டிகளினதும் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக, ஆயுதம் ஏந்திய இளைஞர்களை கோஸ்டி சேர்ப்பது. மக்களையோ சக போராளிகளையோ மதிக்காத, ஆகக் குறைந்தது மனிதாபிமானத்துடன் கூட நோக்காத ஒரு படையை உருவாக்கியது. போன்ற நிகழ்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். மக்களை ஆயுதபாணியாக்குவதன் ஒரு கட்ட நடவடிக்கையே ஆயுதம் எந்திய முழுநேர போராளிகளின் அமைப்பு என்ற நிலைக்கு பொருத்தமான ஒரு மக்கள் படையை உருவாக்க வேண்டும்.

7. எதிர்காலப் போராட்டம் சம்பந்தமான விரிவானதும் திட்டவட்டமானதும் ஆன வேலைத்திட்டம் அவசியம். இது இன்று சிறு இயக்கங்கள் எனக் கருதப்படும் அரசியல் தன்மை பெற்ற இயக்கங்களினதும் தலைமையை நிராகரித்து அரசியல் உணர்வுடனும் தொடர்ந்து போரிடும் உறுதியுடனும் வெளிவரும் போராளிகளினதும் படிப்படியான கூட்டு முயற்சியாலேயே உருவாக்கப்படல் வேண்டும்.

இந்த நிலையில் நாம் எதை மேற்கொள்ளவுள்ளோம்? இங்குதான் குறுந்தேசியவாதிகளும் நாமும் முரண்படுகிறோம். அவர்களின் எல்லைகளுக்கு அப்பால் நாம் சிந்திப்பது மாத்திரமல்ல, அவர்களின் எல்லைகள் தற்போதைய நிலையில் தவறானது என்பதே, எமது கருத்தாகும்.

இன்றைய அரசியல் நிலையில் நெகிழ்வுத் தன்மை கொண்ட வேலைத் திட்டத்துடன் கூடிய ஒரு மிகப் பரந்த வலுமிக்க தேசிய விடுதலை இயக்கத்தாலேயே தற்போதைய பாதக நிலைக்கு முகங்கொடுக்க முடியும் இப்போதைக்கு இருக்கும் இடது ஒட்டத்தையும் ஜனநாயக சக்திகளையும் திரட்சிபெறச் செய்யமுடியும். ஆனால் இன்றைய நிலையில் இவ்விதமானதொரு இயக்கமொன்றில் அடக்கப்படும் அல்லது பிற்போக்கு சக்திகளால் வென்றெடுக்கவும் குழப்பபடக் கூடியதாகவே உள்ளது. உடன் அவசியத்தை நிறைவேற்றக் கூடிய சாத்தியப்பாடின்மையே இது காட்டுகின்றது. புரட்சிகரமான வேலைத்திட்டத்துடனும் அமைப்புக் கட்டுப்பாட்டுடனும் கூடிய வலுமிக்க தேசிய விடுதலை இயக்கத்தாலேயே இன்றைய நெருக்கடி நிலையில் நின்று தாக்கு பிடிக்க முடியும்.

ஆனால் இவ்விதமான தொரு தேசிய இயக்கம் பெருமளவு ஜனநாயக சக்திகளை தன்னைச் சூழ அரவணைத்துச் செல்லும் பட்சத்திலேயே அதற்குரிய தகைமையை இது பெறும் பட்சத்திலேயே ஓங்கி வரும் பிற்போக்கு ஆதிக்கத்திற்கு முகம் கொடுக்கும் ஒரு சமூக சக்தியாக உருவாக முடியும்.

கழகத்தை தொடர்ந்தும் ஒரு நெகிழ்வுத் தன்மை உள்ள இயக்கமாக மறுசீரமைக்கும் அளவுடன் எமது கருத்துப் போராட்டத்தை எல்லைப்படுத்தும் நோக்கம் இனியும் பயனற்றது. புரட்சிகரமான வேலைத்திட்டத்துடனும் இறுக்கமான அமைப்புக் கட்டுப்பாட்டுடனும் கூடிய ஒரு இயக்கமாக கழகத்தை இனி மாற்றுவதே அவசியமானது. கழகத்தை இவ்வித இயக்கமாக மாற்றும் எமது நோக்கத்தில் நாம் வெற்றி பெறுவதற்கான சாத்தியப்பாடும் மிகவும் சொற்பமானது. நாம் வெற்றி பெற்றாலும் கூட தற்போது மேலோங்கியுள்ள பிற்போக்கு அலைக்கு தனித்து நின்று ஈடுகொடுக்க கூடியதான ஒரு இயக்கமாக, கழகத்தை மாற்றுவது சாத்தியமற்றது. கழக அக நிலையும் நாம் முன்பு கூறிய புற நிலையும் அதற்கு அனுமதியாது. நாம் ஏற்கனவே கூறியபடி எமது நோக்கத்தைப் போல் நோக்கம் கொண்ட பல சக்திகளும் படிமுறையான உறவு முறையான வளர்ச்சியின் மூலம் ஒன்று கூடி வகுத்துக் கொள்ளும் ஒரு வேலைத்திட்டத்தின்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# இருண்ட பகல்

ஃ

பனைகளின்
தலைகள் பற்றி எரியும்.
கிடுகு வேலிகளும்
சேர்ந்து எரியும்.
கிழக்கும், வடக்கும்
இருள் தின்னும்.

ஃ

நீலக் கடலில்
மீன்கள் பிடிக்கப்படுவதில்லை;
மனிதர்கள்.

ஃ

எல்லா
விரல்களும்
விடுதலையை மீட்ட,
சுதந்திர யாழைத் தேடும்.

ஃ

மஞ்சள் நிற
வெட்டுக்கிளிகள்
பண்பாட்டு கிடங்குகளில்
நெருப்பு மூட்டும்.
சேகரித்த மானுடச்
செல்வாதாரங்கள்
சாம்பலாகும்.

ஃ

என் பூமி மக்கள்
தம் புத்திரர் விரல்களை
தம்முடையதாக நினைப்பர்.
ஒரு இருண்ட
பகல் நீளும்.
தமக்குள் விரல்கள்
சீண்டிக் கொள்ளும்.

அராஜக
விரல்களில்
நகங்கள் பெரிதாய்
வளரும்.

ஃ

விடுதலை விரும்பும்
விரல்களை,
நகங்கள் கீறிப் பார்க்கும்.
வழியும் குருதியில்
'சமூக விரோதி' என
எழுதிச் செல்லும்.........
தெருமுனையில்
தணியா நெருப்பு.
யாழும் எரியும்
விரல்களும் உதிரும்.

ஃ

பனைகளின்
தலையில்
ஏற்றும் கொடிகளில்
என் பூமி மக்களின்
எலும்புக் கூடுகள்
இன்னும்
எரிந்து கொண்டிருக்கும்.

ஃ

---

ஊடாகவே இவ்விதமான தொரு அமைப்பு சாத்தியமாகும். எப்படியிருந்தாலும் புரட்சிகர சக்திகளின் தலைமையில் பெருமளவு ஜனநாயக சக்திகளையும் தேசபக்தர்களையும் உள்ளடக்கிய ஒரு வலுமிக்க தேசிய இயக்கத்தை உருவாக்க முடியாது போனால் பிற்போக்கு வாதிகளின் கைகள் அனைத்து விஷயங்களிலும்மேலோங்கப் போவது உண்மை. பங்காளதேஷ் புரட்சியாளர்களுக்கும் ஜனநாயக சக்திகளுக்கும் நடந்த கதி தமிழ் ஈழத்திற்கும் நடக்கக் கூடும். இவ்விதமான தொரு நிலைமையை நாம் முன் கூட்டியே அனுமானித்துள்ளதால் அதற்கும் தயாராய் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாய் உள்ளோம், எனவே இம்மாநாட்டின் மூலம் கழகத்தை வலுமிக்க தொரு தேசிய விடுதலை இயக்கமாக பரிணமிக்க முயற்சிப்போமாக என்று கூறி விடை பெறுகின்றோம்.

(இவ்வறிக்கை 23 08 1986 முதல் 06 09 86 வரை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மத்திய குழு உறுப்பினர்கள் சிலரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின (PLOT) தன் அரசியல் செயற்குழுவும் இணைந்து பின் தளத்தில் இந்தியாவில் நடத்திய மாநாட்டிற்கு புதுக்குரல் முன் வைத்ததாகும்)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



# இங்கேயும் இப்படித்தான்

-அருண்

ஈழ விடுதலை அமைப்பொன்றினுள் நடந்த அராஜகப் போக்கை மையமாக வைத்து, ஈழப் போராளி ஒருவரால் பின்னப்பட்ட சிறுகதை-
இது கதையல்ல உண்மை சம்பவம்.

பின் தளத்துக்கு (இந்தியாவுக்கு) பயிற்சிக்கு வந்ததில் இருந்து தினசரி நடவடிக்கைகள் என்றும் போல் அன்றும் காலை 5 மணிக்கு கீர் கீர் என்று மூன்று தடவை விசில் அலறியது. ஆம் பிளட்ன் டு (முகாம்) களில் போகும் திசைமறந்து போகின்ற விடுதலை இயக்கங்களை பற்றி நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்த தோழர்கள் சற்று ஆழமாக தூங்கிக்கொண்டு இருந்த போதிலும் அலறிய விசிலை அசட்டை செய்யாமல் ''அலேட்'' உசார் ஆகிவிட்டார்கள். காலைக்கடன்களை கழிக்க சென்றவர்கள் காலை 6 மணிக்கு பரேட் விசில் அடித்ததும் ஒன்று கூடினர் ''ஸரென்ந்'' தோழர்களின் எண்ணிக்கை கணக்கெடுப்பட்டதும் பயிற்சிக்கு சென்றனர்.

தோழர்கள் காலை உடல் பயிற்சி முடிந்ததும் வியர்வை துளிகள் ஆடையை நனைத்து மழையில் நனைந்தவர்களைப் போல காட்சியளித்தாலும்-விறைத்து போனவர்களை பார்ப்பது போன்றல்ல-கம்பிரமான நடையுடன் இராணுவ வீரனுக்குள்ள கவர்சிச்யுடன் அணிவகுத்து தமது பிளட்டூன்களுள் நுழைய முற்பட்ட ம்பாது மீண்டுமொரு முறை கீர் கீர் என்ற விசிலொலி அனைத்து தோழர்களின் காதுகளையும் துளைத்தது.

அந்த விசில் ஒலியுடன் அந்த முகாமின் எதிர் வாசலருகே பச்சைப்பசேலென உறுமிக் கொண்டு வந்து நின்ற ஜீப்பொன்றில் இருந்து அதிரடிப்படை வீரர்களைப் போல சிலர் தொப்பு தொப்பெனக் குதித்தனர் அவர்களில் ஒருவர் ம்-நீ அங்சே நில் மேலும் நீ அங்கே நில் எனக் கட்டளை இட்டார். ஒவ்வொருவர் கையிலும் S. M. G என அழைக்கப்படும் புத்தம் புதிய துப்பாக்கிகள் மற்றும் சிறுரக பிஸ்டல்கள் அதிரடித்தாக்குதலுக்கு தயார் போன்ற நிலையில்.

ஜீப்பின் முன்புற இடது பக்க கதவு திறக்கப்பட்டு ஒரு நாட்டின் பிரதமர் வருகை தருவது போல பதுமையும், மெதுமையும் ததும்ப பக்கத்தில் இரண்டு மெய்ப்பாது காவலர்களுடன் பின்புறச் சாயலாக இடதுகையை வைத்துக் கொண்டு மறு கையை மெதுவாக வீசி இராணுவ அணிவகுப்பு வாத்திய இசைக்கு நடப்பவர் போல செயலதிபர் வந்து கொண்டு இருந்தார்.

பயிற்சி முகாமின் தங்குமிட விடுதியின் ''பிளட்டூன்'' வாயிற பகுதிகளில் இருந்தும் ஒவ்வொரு பிளட்டூன தலைவர்களும் (சார ஜன்களும்) லெவ்-ரைட், லெவ்-ரைட் என உரக்க கட்டளையிட்டவாறு இராணுவ அணி வகுப்புடன் தமது தலைவருக்குரிய மரியாதையை வழங்கினர்,

எமது செயலதிபரை நாம் இன்றைக்காவது, நேரில் பார்க்கின்றோம் எமது மக்கள் என்றைக்குத்தான் பார்க்கப் போகின்றார்களோ? என்ற பெருமை சிலரின் மனதில் குடி கொண்டிருந்தாலும் ''நாங்கள் இங்கு படுகின்ற கஸ்டத்தில், ஒழுங்காக பயிற்சியில் ஈடுபடும் தோழர்களுக்கு சாப்பாடு ஒழுங்காக இல்லை. ஊரிலை சனங்கள் நெடுகலுமே



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

செத்துக் கொண்டு இருக்குது தோழர்கள் களத்தில் ஆயுதம் இன்றி, எதிரியிடம் பிடிபடுகின்றார்கள். இவை இஞ்சை என்னடா என்றால் தாங்கள் நினைத்தமாதிரி வெளிநாட்டு ஜீப் முன்னுக்கும் பின்னுக்கும் HONDA மொட்டார்சைக்கிள் பக்கத்தில் வேறு, பட்டாளம் போல் மெய்ப்பாதுகாவலர்கள். இவ்வளவு புழுக்க காலமாக இருந்தாலும் கோட் சூட், என்ன செய்ய என விவேகன் தன் மனதுக்குள் குமுறிக் கொண்டான். இந்த குமுறல் எண்ணங்களை சாதாரணமாக விவேகன் மனதில் மாத்திரம் எழுந்ததல்ல, அந்த முகாமின் பெரும்பான்மை தோழர்களின் உளக் குமுறலும்தான். இருந்தாலும் இவற்றையெல்லாம் வெளிப்படையாகக் கதைத்தால், இயக்கத்தினுள் உயிருக்கே ஆபத்து. இதுவும் விவேகனுக்கு மட்டுமே தெரிந்ததுமல்ல. லெப்ட்-ரைட் கோல்ட்-செக், வன்-ரு கட்டளை நிறுத்தப்பட்டது. தோழர்களின் அணிவகுப்பு கழகத்தின் கொடிக்கம்பத்தின் முன்னால் வந்து நின்றது. மீண்டும் ''கீர்'' என்ற விசில் சத்தம் அந்த முகாமின் பரப்பளவில் நின்ற அனைவரையுமே அமைதியாக்கி நின்றது.

முகாமினுள் உணவுத் தயாரிப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தவர்களும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தவர்களும் கூட விசில் சத்தத்துடன் ''அற்றேன்சன்'' ஆகி விட்டனர். கழகத்தின் கொடி ஏற்றப்பட்டது.

''என்னதான் இருந்தாலும், நாங்கள் கொடிக்கு மரியாதை கொடுக்க வேண்டும்'' என்று விவேகனுக்கு பரதன் தன் உணர்வுகளால் சைகை காட்டினான்.

அணிவகுப்பு முடிவுற்றதும் இன்னும் சில நிமிடங்களில், செயலதிபருடனான கூட்டம் ஒன்று நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அந்த சில நிமிடங்களில்...... ''என்னடா எப்பப் பார்த்தாலும், காலையில் பழைய சோற்றுக் கஞ்சிதான். முந்தியெண்டா கடலையும் பாணும் முட்டையும் பழமும் பயறும். ம்-ம்... இப்ப வரவர எங்கட வயித்தில் அடிதான்'', என்றவாறு குரல்கள் பரவின.

''காலை எழுந்தவுடன் பொறுப்பாளர்களுக்கு ஒரு சலூட்டும் நல்ல ரெயினிங்கும்...

பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பழைய கஞ்யுயிம் ஒரு கப் கடலையும்......

மாலை முழுவதும் சம்ம சொட்டும் கிறாலிங்கும் தண்டனை என்று வழக்கப்படுத்திக் கொள் தோழர்''......

பாடல் சலசலத்தது. பதட்டமும் காணப்பட்டது. அப்போது அநதப்பக்கமாக உணவுத் தயாரிப்பகத்தை நோக்கி செயலதிபர் வந்து கொண்டிருந்தார். ''டேய்...டேய்... பெரியய்யா வாராரடா'' என்றவாறு ஒரு சிலர் தம்மை மரியாதைக்கு உரியவர்களாக தம்மைத் தாமே ஆக்கிக் கொண்டு மென் சிரிப்பொன்றை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். உணவுத் தயாரிப்பகத்தை பார்த்துவிட்டு, ''உணவுகளையெல்லாம் மூடி வைக்க வேணும், என்ன...உணவுகளை எல்லாம் கண்டபடி கொட்டிறியள் போல இருக்கு. ரேசன் எல்லாம் அதிகமாக வருவது போல'' என்ற கணிப்பீட்டை உதிர்த்தார்.

விவேகன் மனதோ ஆத்திரத்தால் ஆவேசப்பட்டது. ''அடுத்தமுறை ரேசனை குறைக்கிறதுக்கோ அல்லது நிற்பாட்டுவதற்கோ தெரியவில்லை. அதற்கு சேர்த்தும் இப்பவே பதில் சொல்லியாச்சு. மந்தைகளை வைத்து, பயிற்சி முகாம நடத்துவதைப் போல நடத்துகினம். சில வாரங்களுக்கு முன் பக்கத்து மோட்டை முகாமில்... தோழர்... மருந்து எடுக்கப் பணமில்லாமல் இறந்ததாகக் கூறிய செய்தியும், பார்வையாளர்களாக முதலாளித்துவ அரசு அதிகாரிகளாக முகாமைப் பார்வையிட வரும் இவர்கள் விடுதலைப் போராட்டத் தலைவர்களா?'' கேட்கத் துடித்தது. உள்ளம் குமுறியது. மெதுவாகவே மூச்சை இழுத்து விட்டான்.

''சரி...சரி...எல்லாத்துக்கும் ஒரு நேரம் வரும்தானே'', தன்னையே சமாதானம் செய்து கொண்டவனாக, கூட்டம் ஆரம்பிக்க இருக்கும் இடத்துக்கு, பரதனுடன் ஏனையோரைப் பின்தொடர்ந்து சென்றான். அனைத்துத் தோழர்களும் ஒன்று கூடினர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

## ஈழ விடுதலைப் போராட்ட வதைமுகாமிலிருந்து ஓர் மடல்

அம்மா.
எனது சுற்றம் என்னைத்தேடி
கதவிலே தட்டும் போதெல்லாம்!
தாயே நீ வெம்பிக்கண்ணீர் விடுவதை
எண்ணி நான் வேதனைப்பட்டாலும்
என் இளமையின் சிரிப்பு
என் கையிலும்
எதிரியின் சிறையிலும் இல்லை.
ஆனால்
அது ஈழத்து திரிபுவாத முகாமின்
புதிய ''இட்லத் தோழமை'' என்னும்
துட்டர் கையிலே துவண்டு போனதே
என் துளிர்விடும்மேனி ததும்பிடும்போதும்
சீழ்படும் தசையாய்
தேகம் வதை வதை
என்கண்ணால் கண்டதும்
புரட்சிச் சிறையிலே புதைகுழியிலே
எத்தனை (மானுடங்கள்) இளந்துளிர்கள்
(மறைந்த தென்று
மறைக்கப்பட்ட தென்று
அம்மா, நீ நம்பாவிடினும்
நான் என்கண்களால் பார்க்கின்றேன்
என்னை இறுதியில் நீ
சந்திக்கும்போது
ஒரு குருட்டு முண்டமாய்
செவிட்டுப் பிண்டமாய்
சிதைந்த மேனியோடிருந்தபோதிலும்
நாளைய தோழமைப் பொழுதுகளும்
இரவாய் அமையா
சின்னங்களிவையே
அம்மா,
எனது நாட்டின்
சுதந்திர மீட்பினுள்
தளர்ந்த நீதி
வளர்வதை தட்டி
நிகழ்வதை கேட்க
தோழமைப் பெயரால்
திரிபு மாக்ஸிய விற்பனர் எமக்கு
வழங்கிய பரிசு
''உளவாளி'' என்றும்
''சதிகாரன்'' என்றும்
மேனியைச் சிதைத்து
வானத்தை இருட்டி
ஆறடி மண்ணும்
அவல வாழ்வுமே.

—ஒரு பாலஸ்தீனக் கவிதையின் தழுவல்

---

மீண்டும்... அதே குரல் ஒலித்தது. இன்றைய நிலைப்பாட்டை விளக்கும் வகையில், இந்தக் கூட்டத்தைக் கூட்டியுள்ளோம். நாங்கள் இன்று, ஒரு நெருக்கடியான, கால கட்டத்தினுள் இருந்து கொண்டிருக்கின்றோம். இந்திய அரசு வலுக்கட்டாயமாக எம்மை சிறீலங்கா அரசுடன் மோதவிடப் பார்க்கின்றது. சில விடுதலை இயக்கங்கள், இந்தத் திட்டத்திற்கே பலியானதன் விளைவுதான், அனுராதபுர சிங்கள மக்களின் படுகொலை. நாம் இது போன்ற திட்டங்களுக்குப் பலியாக முடியாது. எம்மிடம் எடுத்த ஆயுதங்களை விரைவில் தருவதாக இந்திய அரசும் கூறியுள்ளது. ஏனைய இயக்கங்களின் கொரில்லாப் போராட்ட முறைகளால், நாமும் களத்தில் இறங்க வேண்டியுள்ளது'' பெரியவர்களின் பேச்சுக்கிடையே' பரதனின் குசு குசுப்பும் கேட்டது ''பெரியவரே, நீங்கள் மட்டும் அல்ல, நாங்களும் ஒரு நெருக்கடியான கால கட்டத்தில்தான் இருக்கின்றோம். இந்திய அரசு மட்டுமல்ல, நீங்களும் எங்களைக் கட்டாயமாகப் போராட வைக்கின்றீர்கள். உங்களுக்குப் பறிமுதல் செய்த ஆயுதங்கள் கிடைக்கப் போகின்றது. ஆனால் நாங்களோ, சதித் திட்டக்காரர்கள். அடக்குமுறையாளர்கள் அனைவருக்கும் எதிராகவே ஆயுதம் வாங்க வேண்டியுள்ளது'' இதனைக் கேட்ட விவேகனுக்கு திகைப்பு ஏற்பட்டது, ''டேய் மொக்கா என்னடா கூட்டம் முடியும் முன் ''B'' முகாமுக்குப் (சித்திரவதை) போக விரும்புகின்றாய் போலிருக்கு சனியனே, பேசாமல் இரு''.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

இதற்கிடையே இவர்களுக்குப் பக்கத்தில் இருந்த தோழரொருவர் எழுந்து விட்டார். பரதனும் விவேகனும் ஒருவரை ஒருவர் பார்ப்பதற்கிடையில், "பெரியப்பா, ஆயுதம் இல்லாமல்ஓர் தாக்குதலை மேற்கொள்வதெப்படி எல்லாரும் எம்மை சாப்பாட்டு ராமர்கள்...என்று சொல்லினம்," எனக் குரல் கொர்டுத்தார்.

"ஆயுதங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். விரைவில் அந்தக் குறை தீர்ந்துவிடும். நாம் ஏனைய இயக்கங்களைப போல் ஆயுதங்கள் மட்டும் கிடைத்து விட்டால், உடனே சென்று நாம் தாக்குதல் நடத்தப் போவதில்லை. காரணம், நாம் பொதுவுடமை ஆட்சி ஒன்றை அமைப்பதற்கு நாடு முழுவதும் திட்டமிட்ட முறையில் பரந்து பட்ட தாக்குதலை மேற்கொள்ள வேண்டும். அதற்காக அனைத்து மக்களையும் அணிதிரட்டவேண்டும். குறிப்பாகத் தென்னிலங்கை முற்போக்குச் சக்திகளுடன் எமது தொடர்புகளை வலுப்படுத்தி வருகின்றோம். தேவையேற்படின் தென்னிலங்கையைக் கூட எமது தளப்பிரதேசமாக, அமைக்க வேண்டி ஏற்படலாம். ஏனைய இயக்கங்களைப் போல, ஆயுதங்களைத் தூக்கிக்கொண்டு தெருவில் அலைவதால் மட்டும், விடுதலைப்போரை நடத்திவிட முடியாது." என்றவாறே அவர்— செயலதிபர்—அடுக்கிக் கொண்டே போனார்.

இதற்குள் விவேகன் தனக்குப் பக்கத்தில் இருந்த தோழர்களிடம், பெதுவாகக் கூறினான். "நேற்று புதன் மாலை நான்கு மணிக்கு, எங்கட தமிழீழத்தின் குரல்" கேட்டனியளே. அவங்களும் இதைத்தான் எந்த நேரம்பார்த்தாலும் போடுவாங்கள். கருத்துகளைக் கேட்டால், நல்லாத்தாண்டா கிடக்குது, நடைமுறையில் பாருங்களேண்டா, சிறீலங்கா வானொலியும், ஜே. ஆரும் கூட, பேசினால் நல்லாத்தாண்டா இருக்குது' ஆனால் நடைமுறையில்... எங்கட ஒலிபரப்புக் காரங்களும் தலைமைக்கு வசை பாடாமல் இருக்கினமே, அப்படியெண்டால், ஒலிபரப்புப் பிரிவுக் காரங்களும், இடைக்கிடை சித்திரவதை முகாமுக்கு வந்து போகவல்லவோ வேண்டும்" எனக் கூறினான்.

முணுமுணுப்புக்களை அகற்றவோ என்னவோ, புதிய குரலென்று', பெரியய்யா செய்யிறது சரிதான். நான் சொல்லுகிறன், ஆயுதங்களை வாங்கினா, எங்கடை ஆட்களும் தெருவில் தூக்கிக் கொண்டு திரிவினம். எங்கடை இயக்கம் பேசறதுக்கும், செய்யிறதும் இடையிலுள்ள இடைவெளியை மக்களும் கண்டுருங்கள் அதற்காகத்தாண்டா, மொத்தமாக, இந்தப் பிரச்சினைக்கு எங்கட தலைமை ஆயுதமே வாங்காமல் விட்டுட்டுது. பிரச்சினையும் அவையளுக்குத் தீர்ந்து போச்சுது," இப்படிப் பலப பல...ந்தியின குரல்கள் நசுங்கிக் கிடந்தாலும், உள்ளுக்குள் குமுறின.

"ஒழுங்காகத் தற்பொழுது உணவுப் பொருட்கள் வருவதில்லை, பெரியய்யா". என்றார் மெதுவாகவே, விவேமுள்ள அந்த முகாம் பொறுப்பாளர்.

"போராட்டம் என்றால் இப்படித்தான். அதுவும் எமது போராட்டம் மிகவும் கடினமானது இதை விடக் கொடுமைகளை அனுபவிக்க வேண்டி வரும். தற்போது செலவுகளைக் குறைத்து, ஆயுதங்கள் வேண்டுவதற்கு, கூடுதலாகச் செலவு செய்து கொண்டிருக்கிறோம்," என்றார்

"என்ன பெரியய்யா, ரெய்யினிங் செய்யிற தோழர்கள், போடுறதுக்கு...முக்கியமாக...ஜட்டி, காற்சட்டை. ரீசேற். சப்பாத்து இல்லாமல் இருக்கினம். ஒழுங்காகப் பயிற்சியும், செய்விக்க முடியவில்லை. ஓடி ஓடி காலே தேய்ந்து போச்சு," இப்படியும் குறைபாடுகள்.

பெரியவரும் சாமான்யமானவரா என்ன!... "இந்தப்பிரச்சினைகளை எல்லாம் உங்களுடைய பொறுப்பாளர் மூலமாக அனைத்து முகாம் பொறுப்பாளரிடம் ஒப்படைத்து, அவர் மூலமாக நிர்வாகத்துக்கு அனுப்புங்கோ, நானும் இதை நிர்வாகத்தில் கதைக்கிறன். இப்படியான பிரச்சினைகள் முன்னமே எழுதிக் கொடுத்தனீங்களோ."

"எழுதி எழுதி எத்தனை முறை கொடுத்திட்டம்...." பல குரல்கள் ஆவேசமாக எழுந்தன.

"எனக்குத் தெரியாது. நான் இன்றைக்குத்தான். கேள்விப்படுறன்," என்றார் அந்தப் பொறுப்பு மிக்க செயலதிபர்.

பக்கத்தில் நின்ற ஒருவர் குறுக்கிட்டு, "பெரியய்யா, பதினொரு மணியாகுது,"? என்று எதனையோ குறிப்பிட்டு, எதற்கோ அவசரப்படுத்தினார். "சரி... சரி... நான் அவசரமாக பதினொரு மணிக்கு ஒரு மினிஸ்ரரைச் சந்திக்க வேணும்," என்று பெருமிதமாக அந்தப் பெரியவர் பார்த்தார்.

இடையே குறுக்கிட்ட ஓர் குரல், "இதை ஒருக்கா கவனத்தில் எடுத்தால் நல்லது பெரியய்யா, மேல் மட்ட நிர்வாகத்திடம் இருந்து, அன்றாட நிலைமைகளை விளங்கப்படுத்த எவருமே வருவதில்லை. நீங்களென்றாலும், மாதத்திற்கு ஒரு தடவையாவது வந்து போங்கோ"...என்றது.

"இனிமேல் மாதம் ஒரு தடவை நான் வந்து போவன். ரெண்டு பேரை நலன்புரி ஆலோசகரகளாக போட்டு இருக்கிறம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அவையளிடம் உங்கட பிரச்சினைகளை எடுத்துச் சொல்லுங்கோ.'' எனக்கூறி ''டாட்டா'' ''காட்டினவர்தான் பொனவர் போனவர்தான்

முகாம் பொறுப்பாளர் முகாமிலிருந்த ரேப் ரெக்கார்டரை போட்டார்.

''அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே,
உச்சிமீது வானிடிந்து
விழ்கின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை''

என்ற அடிகளுடன் பாடல் தொடர்ந்தது தோழர்களும் சேர்ந்து பாடினர். தமது உறுதியான போராட்டப்பாதையை வலுவாக்கியவர்களாக, மனதில் நிம்மதி கண்டவர்களாக இருந்த போது, ராசனும் பாபுவும் இப்படித் திசையை மாற்றினார்கள்.

''ஜட்டி இல்லை
ஜட்டி இல்லை
ஜட்டி என்பதில்லையே,
சொத்து சொகுசு
கண்ட போதும்
ஏமாற்றும் வித்தை
மறைவதென்பதில்லையே,
நோய்கள் பலகண்ட போதும்
ஜட்டி இல்லை ஜட்டி இல்லை
ஜட்டி என்பதில்லையே,''

பாடலோடு தோழர்களும் இரண்டறக் கலந்தனர்.

மூன்று மாதப் பயிற்சிக்கென பின்தளம் வந்த தோழர்கள். மூன்று வருடங்களாயும், ஒரே உடற்பயிற்சிதான் ஓடி ஓடி உடலும் தேய்ந்தன. கடுமையான வதைப் பயிற்சி. ஆயுதங்களைக் கண்ணில் காணக் கிடையாது. கண்ணீர்க் கதைகளைத் தவிர. விடுதலைக்கென வந்த இவர்கள், இன்று இந்த இயக்கத்தை விட்டே, எப்படி விடுதலை பெறுவதென திண்டாடினர். ஆயிரக்கணக்கான தோழர்கள் உள்ளத்தையும் தேய விட்டனர். ஒடுங்கி விரக்தியின் எல்லையில் நிற்றனர்.

மதிய நேர உணவை முடித்துக் கொண்டு விவேகனுடன் பரதன் தன்னை இணைத்துக் கொண்டான் ''என்னடா விவேகா, இப்படியே இருந்து என்ன செய்யப் போறம் ஓடுறவங்களை இழுத்துப் பிடிச்சு, புரட்சி செய்ய ஏலாதென்று, புதிய கண்டு பிடிப்பொன்றையும் எங்கட தலைமை இப்ப ரெண்டு நாளைக்கு முன்னம் அறிவித்திட்டினம். ஆனால் இவையின்ரை நடைமுறைப் பிழையால, விரக்தியடைந்து ஓடுறவங்களைப் பிடிச்சு சித்திரவதை செய்யிறாகள். உளவாளிகள் என்று கையெழுத்து வாங்கிட்டு கொலையும் செய்கினம். இது எங்க போய் முடியுமோ'' ...

''உது மட்டுமே, பரதா, போன கிழமை எங்கட...முகாம் தோழர்... மன விரக்தியுடைஞ்சு, தளத்துக்குப் போகக் கேட்டிருக்கிறார், இவங்களும் கவனிக்கவில்லை. அலுத்துப் போன நிலையில், வெடிமருந்தைக் கட்டிக் கொண்டு கேணியில விழுந்திக்கிறார். வெடிச்சு, உடம்பெல்லாம் சிதறிப் போய்'' ...

''பாவம், அந்தத் தோழர் செத்துப் போட்டார். உயிரோடு இருக்கிறப்ப அவமதிச்ச தலைமைகள், அவர் செத்தப்ப ராணுவ மரியாதை என்ற போர்வையில் இருபத்தியொரு துப்பாக்கி வேட்டுக்கள் தீர்த்து. மரியாதை செய்ததாக பெரிசாய் என்னவோ கதைக்கினம். இன்றைக்கு இயக்கத்துல இப்படியான ஆடம்பரத்துக்கு குறைவில்லை'' ...

''அது மட்டுமே பரதா, இவ்வளவு நாளும் சந்தேகம் ஏற்பட்டால், அல்லது பிரச்சினைகளைத் தட்டிக்கேட்டால், அப்படியான தோழர்களைஎங்கட இன்ரெலிஜன் காரன்கள் கூட்டுக் கொண்டு போனார்கள் 'சித்திரவதை செய்தாங்க எல்லாம் முடிஞ்சுது. இவ்வளவு அட்டூழியம் செய்தவங்க ஆடம்பரமாக ஒவ்வொரு ஊர்லயும் சொகுசாக இருக்கினம். சிலர் இவையள நியாயப்படுத்திக் கொண்டு, அரசியல் வித்தகர்களாகக் காட்டுகினம்'' ...

''...ம்...ம்...என்ன விவேகா இவ்வளவும் ஏதோ செய்ததில தசமப் புள்ளிகள்தாம். வர்க்க விடுதலை என்றான்கள், மனிதாபிமானத்தையே இல்லாமல் செய்து விட்டான்கள். பெண் விடுதலை என்றான்கள்—பெண்களையே சீரழிய வைத்திட்டான்கள்...

''இயக்கத்தில் காசில்ல. வசதியில்ல. தளத்துக்கு தோழக்களை மன நோயாளிகளாக, எந்தப் பாதுகாப்பும் இல்லாமல், தொழில் செய்யிற றோலர்ல, செத்தப்என்ன, போய்ச் சேர்ந்தால் என்ன என்று கணக்கில் அனுப்புகினம், ரெண்டு கிழமைக்கு முன்னம் தான், எங்கட கல்லூரியில படிச்ச ரோசான்... பாவம் அந்தத் தோழர் அப்படிப் போய்த்தான் அநியாயமாகச் செத்துப் போனார். நாங்களும் இப்படிப் கதைக்சுக் கொண்டே இருக்கிறம். எப்பத்தான் இந்தக் கொலைக்கும்பலிடம் இருந்து தப்புறதோ...''

''என்னதான் இருந்தாலும் விவேகா, இத்தனை ஆயிரம் தோழர்களின் போராட்ட உணர்வுகளை மழுங்கடித்து, இந்தியாவில் தெருக்களில அலைகின்ற பாமர மக்கள் படுற கஷ்டம் போதாதென்று, நூற்றுக கணக்கான தோழர்களை நடுத்தெருவில, ஒரு நேர சாப்பாட்டுக்கு வழியில்லாம, நாயாக அலைய விட்டிட்டினம். இந்த நிலைமைக்கு எம்மைத் தள்ளிய இந்த தலைமையை மன்னிக்க முடியாதுதான்''

(தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க.)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்